4th March 1969]

சேல்ஸ் டாக்ஸ் ஆக்ட் படி வரி விதிக்கப்படுகிற உரிமை இருப்ப தாகக் கூறுகிறது. டீலராக இருந்தால் வரி விதிக்கப்படுகிற உரிமை இல்லை. பட தயாரிப்பாளர்கள் விற்பனையாளர்கள் தான், ஆகையால் அதற்கு வரி போடலாம் என்று பம்பாய் ஹைகோர்ட் தீர்ப்பு வழங்கியிருக்கிறது. ஆனால் அந்தப் பட வினியோகஸ்தர்கள் கொடுக்கிற படம் 'சேலபிள் கமாடிடியா (saleable commodity) இல்லையா என்பது பற்றி பம்பாயில், விசாரணை முடியாமல் இருக்கிறது.

திரு. சி. வி. ராஜகோபால் : சினிமாப் படம் பார்ப்பதற்கு என்டர்டெயின்மெண்ட் டாக்ஸ் போடப்படுகிறது. அதைக் குறைத்தால் ஏழை எளியவர்கள் பார்ப்பதற்கு வசதியாக இருக் காதா ?

Land Revenue.

@* 65. *Q.*—THIRU K. RAMAKRISHNA ACHARI : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether land revenue was waived during the last fasli in Kanyakumari district;

(*b*) if so, (1) the number of acres for which land revenue was waived and (2) the amount of loss sustained thereby by the Government; and

(*c*) the basis on which it was worked cut?

நிலவரி.

திரு. கே. இராமகிருஷ்ண ஆச்சாரி : மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்ற பசலி ஆண்டில் கன்யாகுமரி மாவட்டத்தில் நிலவரி ரத்து செய்யப்பட்டதா ?

(இ) ஆம் எனில் (1) எத்தனை ஏக்கருக்கு நிலவரி ரத்து செய்யப்பட்டது ? (2) அரசுக்கு எவ்வளவு பணம் இதனால் இழப்பு ஏற்பட்டது ?

(உ) எந்த அடிப்படையில் அவை கணக்கிடப்பட்டன ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : (அ) இல்லை. 1964-ம் ஆண்டு தமிழ் நாடு (மாற்றப்பட்ட ஆட்சிப் பகுதி) நிலவரி ஏற்பாட்டுச் சட்டத்தின்படி கன்னியாகுமரி மாவட்டத்திலும், திருநெல்வேலி மாவட்டத்தின் செங்கோட்டை வட்டத்திலும், நிலவரி ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. மேற்படி சட்டத்தின் 10-வது பிரிவின்படி, நிலச்சொந்தக்காரர் நிலவரி செலுத்தத் தொடங்கும்போது, புன்செய் நிலங்களுக்காக வசூலிக்கப்படும் அடிப்படைத் தீர்வை ஜூலை 1, 1969 முதற்கொண்டே தள்ளப்படும்.

(இ) & (உ) இவ்வினாக்கள் எழவில்லை.

---

* Questions postponed from the list of questions for the 18th February 1969.